இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 13 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 07 – சனிக்கிழமை 23 ஆகஸ்ட் 2025 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 13 : Thiruvalluvar Year - 2056 - Aavani 07 - Saturday 23 August 2025 - Dak 12 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.8.2025) சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் பல்வேறு பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 644 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.8.2025) சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் பல்வேறு பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 644 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், மருந்து கட்டுப்பாடு இயக்குநர் (பொறுப்பு) ஆர். லால்வேனா, மருத்துவப் பணியாளர்கள் தேர்வு வாரியத் தலைவர் திருமதி உமா மகேஸ்வரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில்

# 644 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஆக.23-**

**மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் பல்வேறு பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 644 நபர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பணி நியமன ஆணைகள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.8.2025) சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு இயக்ககத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 182 உதவி மருத்துவ அலுவலர்கள், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 48 பல் மருத்துவர்கள், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 324 அறுவை அரங்கு உதவியாளர்கள்,

தமிழ்நாடு சுகாதார போக்குவரத்து துறைக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு திறன்மிகு உதவியாளர் நிலை-2 (பற்றவைப்பவர்) மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 18 உளவியல் உதவி பேராசிரியர்கள் மற்றும் மருத்துவ உளவியலாளர்கள், மருந்து கட்டுப்பாடு இயக்ககத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 17 மருந்துகள் ஆய்வாளர்கள், குடும்ப நல இயக்ககத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 54 வட்டார சுகாதார புள்ளியிலாளர்கள் ஆகிய பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட மொத்தம் 644 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் கிடைத்திட, புதிய அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களை கட்டுதல், மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், நவீன மருத்துவக் கருவிகளை நிறுவுதல், காலிப் பணியிடங்களை நிரப்புதல், தமிழ்நாட்டில் உள்ள அனைவருக்கும் குறிப்பாக ஏழை எளிய மக்கள் நல வாழ்வு பெறவேண்டும் என்கிற உயரிய நோக்கில் அவர்களின் இல்லங்களுக்கே சென்று மருத்துவ சிகிச்சை அளித்திடும் “மக்களைத் தேடி மருத்துவம்”, சாலை விபத்துக்களில் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் “இன்னுயிர் காப்போம்-நம்மைக் காக்கும்-48”, சிறப்பு மருத்துவ சேவைகளை மக்கள் குடியிருக்கும் பகுதிகளுக்கே கொண்டு செல்லும் “நலம் காக்கும் ஸ்டாலின்” மருத்துவ முகாம்கள் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி, மருத்துவத் துறையில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்கி வருகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 4,576 உதவி மருத்துவர்கள், 27 மாற்றுத்திறனாளி செவிலியர்கள், 2,772 இதர மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் உள்ளடக்கிய 7,375 பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 555 உதவியாளர் பணியிடங்கள், 584 இளநிலை உதவியாளர் பணியிடங்கள், 187 தட்டச்சர் பணியிடங்கள் மற்றும் 314 சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-3 பணியிடங்கள் நிரப்பப்பட்டு, பணிபுரிந்து வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக, மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு இயக்ககத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 182 உதவி மருத்துவ அலுவலர்கள் (பொது), மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 48 பல் மருத்துவர்கள், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 324 அறுவை அரங்கு உதவியாளர்கள் மற்றும் தமிழ்நாடு சுகாதார போக்குவரத்து துறைக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு திறன்மிகு உதவியாளர் நிலை-1 என மொத்தம் 555 நபர்கள்;

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 18 உளவியல் உதவி பேராசிரியர்கள் மற்றும் மருத்துவ உளவியலாளர்கள், மருந்து கட்டுப்பாடு இயக்ககத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 17 மருந்துகள் ஆய்வாளர்கள், குடும்ப நல இயக்ககத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 54 வட்டார சுகாதார புள்ளியிலாளர்கள், ஆகிய பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட மொத்தம் 89 நபர்கள்;

என மொத்தம் 644 நபர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று 22.8.2025 பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், மருந்து கட்டுப்பாடு இயக்குநர் (பொறுப்பு)

ஆர்.லால்வேனா, மருத்துவப் பணியாளர்கள் தேர்வு வாரியத் தலைவர் திருமதி உமா மகேஸ்வரி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் மரு.எ.சோமசுந்தரம், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் மரு. த.க. சித்ரா, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் (பொறுப்பு) மரு. தேரணிராஜன், குடும்ப நல இயக்குநர் மரு.வெ. சத்யா, தமிழ்நாடு சுகாதார போக்குவரத்துத் துறை இயக்குநர் எஸ்.நடராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பீகாரில் நீக்கப்பட்ட வாக்காளர்களை மீண்டும் சேர்க்க வேண்டும்!

## தேர்தல் ஆணையத்திற்கு உச்சநீதிமன்றம் உத்தரவு!

*புதுடெல்லி, ஆக.22-*

*பீகார் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்களிடம் ஆதார் அட்டை விபரங்களை பெற்று மீண்டும் சேர்க்க வேண்டும் என தேர்தல் ஆணையத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 11 ஆவணங்களில் ஒன்றை கட்டாயமாக வழங்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்கக் கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*பீகார் வாக்காளர் பட்டியல் வழக்கு உச்சநீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, நீக்கப்பட்ட 65 லட்சம் பீகார் வாக்காளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டதாக தேர்தல் ஆணையம் உச்சநீதிமன்றத்தில் தெரிவித்தது. தவறாக நீக்கப்பட்டிருந்தால் மீண்டும் ஆதார் உள்ளிட்ட ஆவணங்கள் மூலம் விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.*

*இதனை அடுத்து, மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பிரஷாந்த் பூஷன், பல ஆயிரம் வாக்காளர்கள் வெளி மாநிலங்களில் புலம்பெயர் தொழிலாளர்களாக உள்ளதாகவும், மழை வெள்ளம் பாதிப்பு உள்ள நிலையில் நீக்கப்பட்டவர்கள் உடனடியாக விண்ணப்பிப்பதில் சிக்கல் உள்ளதாகத் தெரிவித்தார்.*

*மேலும், விண்ணப்பம் 6 மூலம் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்று வாதிட்டார்.*

*அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், பீகார் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்களிடம் ஆதார் அட்டை விபரங்களை பெற்று மீண்டும் பட்டியலில் சேர்க்க வேண்டும் என உத்தரவிட்டனர்.*

*11 ஆவணங்களில் ஒன்றை கட்டாயமாக வழங்க வேண்டும் என்று வாக்காளர்களை நிர்ப்பந்திக்கக்கூடாது என்றும், விண்ணப்பங்களை நேரில் வழங்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தக் கூடாது எனவும் தெரிவித்த நீதிபதிகள், ஆன்லைன் மூலமாக பெற வேண்டும் எனக் கூறினர். மேலும், அரசியல் கட்சிகளின் வாக்குச் சாவடி முகவர்கள், நீக்கப்பட்ட வாக்காளர்களின் பெயர்களை பட்டியலில் மீண்டும் சேர்க்க உதவ வேண்டும் என அறிவுறுத்திய நீதிபதிகள், வழக்கு விசாரணையை செப்டம்பர் 8ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.*

**சென்னை**

# வெறும் ஊரல்ல; தமிழ்நாட்டின் இதயத் துடிப்பு!

## சென்னைக்கு அகவை 386- முதல்வர் மு.க,ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஆக. 23-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னைக்கு அகவை 386-யையொட்டி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் சென்னை வெறும் ஊரல்ல; தமிழ்நாட்டின் இதயத்துடிப்பு என்று குறிப்பிட்டுள்ளார்.**

சென்னை நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

எந்தெந்த மூலைகளில் இருந்தோ நண்பர்களை அளித்து, வாழ வழிதேடுவோருக்கு நம்பிக்கையை அளித்து, பல பெண்களுக்குப் பறக்கச் சிறகுகளை அளித்து, எத்தனையோ பேருக்கு முதல் சம்பளத்தை அளித்து, சொந்த ஊரில் அடையாளத்தை அளித்து,




மொத்தத்தில் நமக்கெல்லாம் வாழ்வளித்த சீரிளம் சென்னைக்கு அகவை 386!

சென்னை வெறும் ஊரல்ல; தமிழ்நாட்டின் இதயத்துடிப்பு! வணக்கம் வாழவைக்கும் சென்னை!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.